திட்டங்கள் தீட்டுவதிலும், சட்டங்கள் ஆக்குவதிலும், அவற்றைச் செயலாக்குவதிலும் முனைப்புடன் உள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், தமது பரந்த அனுபவத்தினாலும், ஆழ்ந்த அறிவாற்றலாலும், தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை மீண்டும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்களின் மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள் குறித்த விவரங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், உறுப்பினர்களுக்குத் தேவையான விளக்கங்களைப் பதிலுரையில் அளித்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகள் அனைத்திற்கும் பதிலுரையில் பதில் இருக்கிறது. காலத்தின் அருமையைக் கருதிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நாளை தனது பதிலுரையை வழங்குவார்கள்.*

6. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை (18-8-2011) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (18-8-2011) வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (18-8-2011) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-8-2011) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 24-11-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7-21-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்)